**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No.12 of 2024

Deposition of P.W. 2

Name of the Witness: திரு.சுகுமாரன்

Date : 18.02.2026

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என்னுடைய அப்பாவின் தங்கையின் மகன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் என் அம்மாவையும், அப்பாவையும் பிரதிவாதி அணுகி பணத்தை கடனாக பெற்று கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு பண பரிவர்த்தனை செய்த காலத்தில் தெரியாது.

2) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் என் அம்மா, அப்பாவுன் தனி தனியாக வசித்து வந்ததாக சொல்லவில்லை. எங்களிடமிருந்து தனியாக வசித்து வந்ததாக தான் சொல்லியுள்ளேன். என் தாய், தந்தை எப்போதும் என் பராமரிப்பில் தான் வசித்து வந்தார்கள். என் அம்மா அவருடைய சாட்சியத்தில் என்னுடன் வசிக்கவில்லை என்று சொல்லியிருப்பது சரிதான். என் அம்மா அவருடைய சாட்சியத்தில் தான் யாருக்கும் பணம் அனுப்பவில்லை என்று சொல்லியிருப்பது தவறு, என் அம்மா பணம் அனுப்பியிருக்கிறார். என் அம்மா பணம் அனுப்பிய விவரம் எனக்கு பின்பு தெரிய வந்தது.

3) நிலம் ஆர்ஜிதம் செய்ததற்கான இழப்பீடு தொகை முதலில் சேலத்தில் உள்ள எங்கள் வழக்கறிஞர் வெங்கடேசனின் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டது. பின்பு அவர் என் அப்பா பெயருக்கு காசோலை கொடுத்தார். அந்த இழப்பீடு தொகை என்னுடைய வங்கி கணக்கிற்கு எதுவும் வரவில்லை. நான் வழக்கு

நடத்துவதற்கு நிறைய செலவு செய்ததால் என் அப்பா என் மனைவிக்கு ரூபாய் 5 லட்சம் பணம் கொடுத்தார்.

4) என்னுடன் உடன் பிறந்தவர்கள் அண்ணன் மனோகரன், தங்கை பெயர் கலைவாணி. மனோகரனுக்கு 64 அல்லது 65 வயதிருக்கும். மனோகரன் பென்னாகரத்தில் என்னுடைய மகனின் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கிறார். மனோகரன் வாடகைக்கு குடியிருப்பதாக சொல்லும் வீடு மனோகரனுக்காக ஒதுக்கப்பட்டது என்றாலும், என் அம்மாவை வைத்து நான் தவறான தானபத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனோகரன் அந்த வீட்டில் ஒரு பகுதியில் குடும்பத்துடன் 25 வருடமாக வசித்து வருகிறார். என் அப்பா வடிவேலு தான் என் மகனுக்கு 2015ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார்.

கேள்வி .. தானசெட்டில்மெண்ட் பத்திரம் 2015ல் எழுதுவதற்கு முன்பாக 25 வருடமாக குடியிருக்கிறாரா?

பதில் .. இது வழக்கிற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்பதால் என்னால் பதில் சொல்ல முடியாது.

5) என் அண்ணனுக்கு கேன்சர் வியாதி உள்ளதா என்று எனக்கு தெரியாது. 2019ல் உடல்நிலை சரியில்லாமல் போனது. என் அப்பா உயிருடன் இருக்கும் போது என் அண்ணனுக்கு பண உதவி செய்துள்ளார். எவ்வளவு பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் அவ்வப்போது ரூபாய் 10,000 கொடுத்துள்ளேன். அதற்கான கணக்கு வைத்திருக்கவில்லை. பிரதிவாதி தான் என் அண்ணனின் மருத்துவ செலவுகளை பார்த்தார் என்றால் சரியல்ல.

6) என் அப்பா 2015ல் நிலம் இழப்பீடு தொகை என் அம்மாவிற்கு சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்துள்ளார், அந்த உயிலை நான் பார்த்துள்ளேன். அந்த உயில் என் அப்பா உயிருடன் இருக்கும் போதே இழப்பீடு தொகை கிடைத்தால் என் அப்பாவே பெற்று கொள்வதாகவும், அவரின் காலத்திற்கு பிறகு இழப்பீடு தொகை கிடைக்கபட்டால் அது என் அம்மாவிற்கு சேர வேண்டும் என்று என் அப்பா உயிலில் எழுதியிருந்தார். என் அப்பா உயிருடன் இருக்கும் போதே இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தொகையை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றால் சரிதான். அந்த பணத்தை என் அப்பாவின் இறப்பிற்கு பிறகு என் அப்பாவின் வாரிசுதாரர்கள் யாரும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. கடனாக கொடுக்கப்பட்டதால் எங்களுக்கு கேட்பதற்கு உரிமையுண்டு.

7) என் பெற்றோர்களை நானோ, என் அண்ணனோ பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பராமரித்தேன். என் அம்மா குமாரசாமிபேட்டையில் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய பராமரிப்பில் வாழ்ந்து வருகிறார். என்னுடைய பராமரிப்பில் என் அம்மா வாழ்ந்து வரவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 245 பென்னாகரம் ரோடு குமாரசாமிபேட்டையில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அந்த வீட்டில் எனது அம்மா மாத வாடகைக்கு குடியிருக்கிறார். முன் பணம் ரூபாய் 10000/- மாத வாடகை ரூபாய் 4000/- நான் சொல்வது தவறு என்றாலும் என் அம்மா ரூபாய் 2 லட்சம் கொடுத்து போகியத்திற்கு குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

8) பிரதிவாதி எனக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அவருக்கும் தொழில் ரீதியாக பழக்கமுள்ளது. நான் கண்ணன் டிரேடர்ஸ், சுகுமார் ரீவைன்டிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன். நான் அவருக்கு ஓட்டலில் இருக்கும் ஏசி, பேன்களை பழுது பார்த்து கொடுப்பேன். அதற்குண்டான பணத்தை கொடுப்பார். மற்றபடி எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த கொடுக்கல், வாங்கல் இல்லை. என் அம்மா அவருடைய சாட்சியத்தில் வீட்டிற்கு போகியத்திற்கு ரூபாய் 2,50,000- நான் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு. நான் ரூபாய் 10 ஆயிரம் தான் கொடுத்தேன். என் தந்தை பணம் கொடுத்த 2 மாதத்தில் என் அப்பா சொன்னதன் பேரில் பிரதிவாதியிடம் பணத்தை கேட்டேன். அப்போது பிரதிவாதி பெங்களூரில் கிரணைட் தொழிலிருந்து 200 கோடி வருவதாகவும், அது வந்தவுடன் பணத்தை திரும்ப கொடுப்பதாக சொன்னார்.

9) என் அம்மா அவர் சாட்சியத்தில் என் அப்பா உயிருடன் இருக்கும் வரை சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பவும் இல்லை, வழக்கோ பிரதிவாதியின் மீது போடவில்லை என்று சொல்லியிருப்பது சரிதான். நேரடியாக போய் கேட்டோம்.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.